மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 37, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. கார்த்திகேயன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

37—

மரக்கன்றுகள் நடுதல்

***3696—திரு. ப. கார்த்திகேயன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் தொகுதி, சத்துவாச்சாரி, பெருமுகை, சலவன்பேட்டை மற்றும் ஓல்டு டவுன் மலைப் பகுதிகளில் மரக்கன்றுகள் நட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பசுமை தமிழகம்" என்ற திட்டத்தின்கீழ் மாபெரும் மரம் நடும் திட்டம், 2022–2023 ஆம் ஆண்டில் மாநிலம் முழுவதும் 2 கோடியே 50 இலட்சம் மரக்கன்றுகள் நடவு செய்யும் பணிகள் வனத் துறைமூலம் மேற்கொள்ளப்பட உள்ளன. இத்திட்டத்தின்கீழ் வேலூரில் சத்துவாச்சாரி, பெருமுகை, சலவன்பேட்டை, ஓல்டு டவுன் ஆகிய மலைப் பகுதிகளை உள்ளடக்கி, மண்ணின் தன்மை, தரம் ஆகியவற்றிற்கேற்ப சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து, 2022–2023–ல் 9 இலட்சத்து 4,200 மரக்கன்றுகள் நட்டு பராமரிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. கார்த்திகேயன் அவர்கள்.

திரு. ப. கார்த்திகேயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். வேலூர் மாநகரம், வேலூர் தொகுதி வெயிலூராக இருக்கிறது. அது பெருமுகை மலை, சத்துவாச்சாரி மலை, சைதாப்பேட்டை மலை, ஓல்டு டவுன் மலை, சலவன்பேட்டை மலை ஆகிய இடங்களில் மரம், செடிகளை நட்டு, வெயிலூரை நிழலூராக மாற்ற வேண்டுமென்பதுதான் என்னுடைய கேள்வி.

2022 மார்ச் 22]

அதுபோல, E.B. line இல்லாத பகுதியில் மரம் செடி ஆகியவற்றை நட்டு, வேலூரை நிழலூராக மாற்ற வேண்டும். வேலூரைப் பொறுத்தவரையில், வெளிமாநிலங்களிலிருந்து சி.எம்.சி.–க்கு சிகிச்சைக்காக வருகிறார்கள். வேலூர் என்றாலே வெயிலூர் என்று சொல்லக்கூடியதை மாற்ற வேண்டும். தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் இந்த நாட்டு மக்களுக்கு, ஏழையெளிய மக்களுக்கு பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றார்கள். செடி இருந்தால்தான், மரம் இருந்தால்தான் நமது நாடு வாழும் என்பதைச் சொல்லி, இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்டு அமைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் வன மண்டலம், வேலூர் வனக் கோட்டம், வேலூர் வனச் சரகக் கட்டுப்பாட்டிலுள்ள சத்துவாச்சாரி பகுதியில், கோட்டைத் தோட்டம் அமைக்கும் திட்டத்தின்கீழ் 1,000 செடிகளும், பெருமளவில் மரம் வளர்க்கும் திட்டத்தின்கீழ் 500 செடிகளும், சலவன்பேட்டை பகுதியிலுள்ள மாலமதி காப்புக்காட்டில் நபார்டு திட்டத்தின்கீழ் 5,000 செடிகளும் மற்றும் சத்துவாச்சாரிக்கு இடைப்பட்ட பகுதியில் அலமேலுமங்காபுரம் காப்புக்காட்டில் 3,000 செடிகளும் இப்போது நடவு செய்யப்பட்டுள்ளன. இதனால் இப்பகுதிகளில் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்து அப்பகுதிகளில் வாழும் பொதுமக்களுக்கும், விலங்குகளுக்கும் குடிநீர் வசதி பெருகியதுடன், சுகாதாரக் காற்றும் கிடைக்கப்பெற்றுள்ளது. தற்போது வனத் துறைமூலம் “பசுமை தமிழகம்” திட்டத்தின்கீழ் இந்த ஆண்டு வேலூர் வன மண்டலத்தில், வேலூரில் 9 இலட்சத்து 4 ஆயிரத்து 200 மரக் கன்றுகளும், இராணிப்பேட்டையில் 2 இலட்சத்து 5 ஆயிரத்து 900 மரக் கன்றுகளும், திருப்பத்தூரில் 5 இலட்சத்து 79 ஆயிரத்து 200 மரக் கன்றுகளும், திருவண்ணாமலையில் 9 இலட்சத்து 5 ஆயிரத்து 600 மரக் கன்றுகளும், ஆக மொத்தம் 25 இலட்சத்து 94 ஆயிரத்து 900 மரக் கன்றுகள் நடவு செய்ய 2022–2023 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டுள்ளது என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

[2022 மார்ச் 22

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. கார்த்திகேயன் அவர்கள்.*

திரு. ப. கார்த்திகேயன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாநகரத்தில் நம்முடைய தலைவர் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் துணை முதலமைச்சராக இருந்த காலத்தில், நம்முடைய அமைச்சர் அவர்கள் வேலூரில் பொழுதுபோக்கிற்கு எந்த இடமும் இல்லாததால் கோட்டை வெளி மைதானம் பக்கத்தில் பெரியார் பூங்காவை 2010 ஆம் ஆண்டில் தமது திருக்கரங்களால் திறந்து வைத்தார்கள். எனவே, வேலூர் தொகுதி, தொரப்பாடி பகுதியில் ஜெயிலுக்கு அருகில் வனத் துறைக்குச் சொந்தமான இடம் இருக்கிறது.* Mini *உயிரியல் பூங்காவை அங்கே கட்டித் தந்தால் வேலூர் மக்கள் பயனடைவார்கள். அதேபோல, தங்கக் கோயிலுக்கு வெளி மாநிலங்களிலிருந்தெல்லாம் இலட்சக்கணக்கானோர் வருகை புரிகின்றனர், அவர்களும் பயனடைவார்கள்; எங்களுடைய வேலூர் தொகுதியில் இருப்பவர்களும் பயனடைவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எங்களுடைய வேலூர் தொகுதி மக்களுக்கு பல்வேறு திட்டங்களைத் தந்தவர் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள். ஏழையெளிய மக்களுக்கும், தமிழ்ச் சமுதாயத்திற்கும், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும், சிறுபான்மையின மக்களுக்கும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் பல்வேறு நலத் திட்டங்களை தனது ஆட்சிக் காலத்தில் வழங்கியிருக்கிறார்கள். ஆகவே, வேலூர் மாநகரத்திற்கு சிறப்பான முறையில் வனத் துறையின் சார்பில் பணிகளைச் செய்ய வேண்டுமென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமைகின்றேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை குறித்து அதிகாரிகள் மட்டத்தில் நான் ஆய்வு செய்து, நிச்சயமாக இந்த ஆண்டு அதைச் செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2022 மார்ச் 22]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பால் மனோஜ் பாண்டியன் அவர்கள்.*

திரு. பால் மனோஜ் பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய மாவட்டத்திலும், தென்காசி மாவட்டத்திலும் விவசாய நிலங்கள் காட்டுப் பன்றிகளால் பாதிக்கப்படுகின்றன என்பதை கடந்த கூட்டத் தொடரிலே எடுத்துச் சொன்னபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், காட்டுப் பன்றிகளை ஒடுக்குவதற்கும், அவற்றைச் சுடுவதற்கும் அரசாணைகள் வெளியிடப்படும் என்று உறுதியளித்திருந்தார்கள். நானும் அவர்களுடன் தொடர்பு கொண்டிருந்தேன். ஆனால், இந்த ஆண்டு விவசாய நிலங்களுக்குப் பெரும்பாதிப்பு காட்டுப் பன்றிகளால் ஏற்பட்டிருக்கிற காரணத்தால் அந்த இரண்டு மாவட்டங்களிலிருந்தும் இதுசம்பந்தமான பிரேரணை அனுப்பப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு முழுவதிலும் அவற்றை ஒடுக்குவதற்கான அரசாணைகளை வெளியிடுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை நான் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஏற்கெனவே சொன்னது உண்மைதான். காட்டுப் பன்றிகளைச் சுடுவதற்கு உத்தரவு பெறுவதற்கான பிரேரணைகள் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன. மத்திய அரசின் அனுமதி விரைவில் வந்துவிடும். இன்னும், ஓரிரு மாதங்களில் அந்த உத்தரவைத் தந்து, மக்களைக் காப்பாற்றுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன் அவர்கள்.*

திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேலூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. ப. கார்த்திகேயன் அவர்கள் தொகுதிக்கு அருகிலுள்ள ஜவ்வாது மலை, சேர்வராயன் மலை, கொல்லி மலை, பச்சை மலை, சித்தேரி மலை ஆகிய பகுதிகளில் 2019 ஆம் ஆண்டில்*

ஏறத்தாழ ரூ.8.94 கோடி செலவிட்டு, 7.10 இலட்சம் அளவிற்கு சந்தன மரக் கன்றுகள் நடப்பட்டன. அந்தத் திட்டம் தொடருமா? தேக்கு மரங்கள் வளர்ப்பிற்கு என்னென்ன திட்டங்கள் உள்ளன? 2019–2020–ல் 64 இலட்சம் மரக் கன்றுகள் நடப்பட்டன. (குறுக்கீடுகள்) புரட்சித் தலைவி அம்மாவின். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் துணைக் கேள்வியை மூலக் கேள்விக்குத் தொடர்புடையதாகக் கேட்க வேண்டும்.

திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் தொகுதிக்குட்பட்டு, மூலக் கேள்விக்கு உட்பட்டதைத்தான் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் ஏற்கெனவே வனத் துறை அமைச்சராக 5 வருடங்கள் பணியாற்றினீர்கள்.

திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: ஆம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதனால், உங்களுக்கு ஒரு துணைக் கேள்வி; மக்களுக்கு பிரயோஜனப்படக்கூடிய நல்ல கேள்வியாக கேட்பீர்கள் என்று சொல்லி அனுமதித்திருக்கிறேன். ஒரு துணைக் கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

முற்பகல் 10–50

திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: வேறு ஒன்றுமே இல்லை. இப்பொழுது இந்தக் கேள்வியின் சுருக்கம், ஏற்கெனவே 2019 ஆம் ஆண்டு 8.94 கோடி ரூபாய் செலவிட்டு சந்தன மரங்கள் நடப்பட்டன. அந்தத் திட்டம் தொடருமா? அதைப்போலவே தேக்கு மரங்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு துணைக் கேள்விதான். நீங்கள் ஏற்கெனவே உள்ள திட்டம் தொடருமா என்று கேட்டிருக்கிறீர்கள். மாண்புமிகு வனத் துறை அமைச்சர், பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு) போதும். துணைக் கேள்வி ஒரு கேள்விதான். மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் வனத் துறை அமைச்சர் அவர்கள், அவர்கள் நட்ட மரக் கன்றுகள் நன்றாக இருக்கின்றனவா என்று

2022 மார்ச் 22]

கேட்கிறார். ஏற்கெனவே அவருடைய period*-ல் மரக் கன்றுகளை எப்படிக் காப்பாற்றியிருக்கிறார் என்பது அவருக்குத் தெரியும். ஆனால், இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலை, தமிழ்நாடு முழுவதும் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தற்போது உள்ள 23.96 சதவிகிதம் என்ற அளவில் இருக்கும் வனப் பரப்பை 33 சதவிகிதமாக உயர்த்துவதற்காக இந்த ஆண்டு மட்டும், ஆரம்ப கட்டம் என்ற நிலையில், இரண்டரை கோடி மரங்களை நடவிருக்கிறோம். அதைத் தொடர்ந்து ஒரு வருடத்திற்கு சராசரியாக 32 கோடி மரங்களை நட்டு, வருகிற பத்து ஆண்டுகளில் அதாவது 2030 ஆம் ஆண்டுக்குள் 261 கோடி மரங்களை நட்டு, தமிழகத்தை பசுமை மாநிலமாக ஆக்குவதற்கு உரிய முயற்சிகளை எடுத்து வருகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) நிச்சயமாக இந்தப் 'பசுமை தமிழகம்' திட்டம் மக்களுக்கு மிகப் பெரிய அளவில் பயன்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 38, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. பரந்தாமன், மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

38—

குடும்ப அட்டை

***11366—திரு. இ. பரந்தாமன்:**

மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தனி நபர் குடும்ப அட்டை வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ஒரு நபர் தனியாக, எவரையும் சார்ந்திராமல், தனியாக வசித்து சமைத்து உண்டு வருவாராயின் அவருக்கு தனி நபர் குடும்ப அட்டை வழங்கப்பட்டு வருகிறது. இந்த வகை குடும்ப அட்டைதாரர்களுக்கு தேசிய உணவு பாதுகாப்புச் சட்டப்படி, நபர் ஒருவருக்கு 5 கிலோ அரிசி என்று நிர்ணயம் செய்யப்பட்டுள்ளபோதிலும், "அனைவருக்கும் உணவு" என்பதை உறுதிப்படுத்துவதற்காக தமிழ்நாடு அரசு 12 கிலோ அரிசியுடன்,